செய்தி வெளியீடு எண்:810 நாள்:28.10.2020

# செய்தி வெளியீடு

## எவரொருவரும் விடுபடா வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி எனும் தலைப்பில் இணையதளக் காணொலி வாயிலான கருத்தரங்கு

எவரொவரும் விடுபடா வண்ணம் அனைவருக்குமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான கருத்தரங்கம் 28.10.2020 அன்று மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இணையதளக் காணொலி வாயிலாக நடைபெற்ற இக்கருத்தரங்கில் பற்றாளர் துறைகளான ஆதிதிராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை, புலம் பெயர்ந்த தமிழர்கள் மீட்பு மற்றும் நலத்துறை, சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் துறை, வேளாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், ஹெல்பேஜ் இந்தியா என்ற தொண்டு நிறுவனம் மற்றும் துறை சார் வல்லுநர்கள் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமானது. எவரொவரும் விடுபடா வண்ணம் அனைவருக்குமான மேம்பாட்டினை உறுதி செய்வது தொடர்பான கருத்துக்களும், நடைமுறையில் நிலவும் சவால்களும். அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதும் ஆகும்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தனது தலைமை உரையில், விளிம்பு நிலையில் உள்ள சமுதாயத்தின் தேவைகளை அறிந்துக் கொள்வதில், தமிழக அரசு தொலைநோக்கு பார்வை கொண்டுள்ளது எனவும், அரசு திட்டங்களில் சில பிரிவினர் விடுபடுவதற்கான காரணிகளான, மக்களுக்கிடையேயான பாகுபாடுகளை களைவதிலும் ஏற்றத்தாழ்வுகள்

மற்றும் பாதிப்புகளை குறைப்பது ஆகியவற்றிலும் தமிழக அரசு பெருமை கொள்ளத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். மேலும், மாநிலத்தில் உள்ள பின்தங்கிய, எளிதில் பாதிப்பிற்குள்ளாகும் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு, இலாபகரமான மற்றும் உற்பத்தித் திறன் மிக்க வேலைவாய்ப்புகளை வழங்குதல், சமூக பாதுகாப்பு அளித்தல் மற்றும் அவர்களை காத்தல் ஆகியவற்றில் அரசின் தெளிவான உறுதி, இத்தருணத்தில் தேவையானது எனவும் குறிப்பிட்டார்.

சில பிரிவினருக்கு எதிரான பாகுபாடுகளை போக்குவதற்கான சட்ட சீர்த்திருத்தப் பாதுகாப்பு அல்லது சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் / அமைப்புகளின் நீட்சி போன்ற சில பிரிவினரை விலக்கி வைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிரான அரசின் இடையீடுகள், அப்பிரிவினருக்காக மட்டுமல்லாமல் சமூகத்தில் பரவலாகவும் பெருமளவில் நல்விளைவுகளை உண்டாக்கியுள்ளதாக, அவர் தெரிவித்தார். பல்வேறு துறைகள் சார்ந்த, ஒருங்கிணைந்த கொள்கைகள் வழி, உற்பத்தித் திறனை கட்டமைக்கும் வகையிலும் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஆதரவான, மனித குலத்தின் மேம்பாட்டிற்காகவும், இந்த இணையதள கருத்தரங்கின் வாயிலாக ஏகமனதாக நிறைவேற்றப்படும் முக்கிய பரிந்துரைகள் அம்மக்களின் நல்வாழ்விற்காக, அரசிற்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

முனைவர் அதுல் ஆனந்த், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர் (முழுக் கூடுதல் பொறுப்பு), மாநில வளர்ச்சி கொள்கைக் குழு அவர்கள், அரசின் திட்டங்கள், விளிம்புநிலையிலுள்ள மக்களுக்கு சென்றடையும் வகையில், அரசு நிர்வாக தரவுகளுக்கான கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து ஓர் முழுமையான திறன்வாய்ந்த தகவல் மேலாண்மை அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தினை தெரிவித்தார்.

**உறுப்பினர் செயலர் (முழுக் கூடுதல் பொறுப்பு)**
**மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**